# வீடுகள் இல்லாதோரின் பிரச்சினை விரைவில் தீர்வு காணப்பட வேண்டும்





கோலாலம்பூர், பிப்.25-

நவீன நகராக விளங்கும் கோலாலம்பூரில் வீடுகள் இல்லாத மக்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான பிரச்சினைகளுக்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம், சமூகநல இலாகா (ஜே.கே.எம்.) பைதுல்மால், தேசிய சமூக நல அறவாரியம், குடிநுழைவு துறை மற்றும் தேசிய பதிவிலாகா ஆகியவற்றின் கூட்டு திட்டமிடல் அவசியம் என்று கோலாலம்பூர் மாநகர் மன்ற ஆலோசனை வாரிய குழு உறுப்பினர் ஹென்றி லாய் சென் ஹெங் கூறினார்.

கோலாலம்பூர் என்றாலே அது ஒரு நவீனமய மாநகராகத்தான் நினைவில் இருக்க வேண்டுமே தவிர வீடுகள் இல்லாதோரைக் கொண்ட தலைநகராக அல்ல என்றார் அவர்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணத்தவறினால் கோலாலம்பூரின் நற்பெயருக்கு இது களங்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் சொன்னார்.